1975 மார்ச் 25] [திரு. சி. பா. ஆதித்தனர்]

பேரவையின் கவனத்திற்கு சொல்ல விரும்புகிறேன். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்கள். அவர்கள் சொல்லியிருப்பது தமிழகத்தில் தற்போது 11 லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அதைப் படிப்படியாக விளை நிலங்களாக மாற்றவேண்டி அரசு பண்ணை நிறுவனம் "பார்ம்ஸ் கார்ப்பொரேஷன்" இந்த ஆண்டு அமைத்துள்ளோம்.

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

என்பது திருக்குறள்.

எனவே, தரிசு நிலங்களை விளை நிலங்களாக ஆக்கும் ஒரு புதிய முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது. இதுவரை, புதுமுறை விவசாய நடைமுறைகளை (மாடர்ன் அக்ரிகல்சரல் டெக்னிக்ஸ்) விவசாயிகள் மத்தியில் பரப்பி பிரச்சாரம் செய்து கொண்டிருந்தோமே தவிர, அரசு நேரடியாக இந்தத் தொழிலில் ஈடுபடவில்லை. எனவே, இந்தப் புதிய முயற்சிக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவு கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். மற்றப் பிரச்சினைகளிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

4. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு முழு நாள் ஒதுக்கப்படாதது குறித்து.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நம்முடைய விதி எண். 159 (2) –இன் கீழ் ஒரு ஒழுங்குப் பிரச்சனை எழுப்ப விரும்புகிறேன். இன்று நாம் துணை மானியக் கோரிக்கை மீது விவாதம் நடத்தியிருக்கிறோம். இதில் விதி என்ன சொல்கிறதென்றால்—

'The Speaker shall allot one or more days after the day allotted for such presentation for the discussion of and the voting on the demands for supplementary or additional expenditure'

என்று விதி இருக்கிறது. நம்முடைய சட்ட மன்ற விதிமுறைப்படி ஒரு நாள் அல்லது இரண்டு நாள் ஒதுக்க வேண்டும் என்றிருக்கிறது. ஆனால் இன்று அவ்வாறு முழு நாளை ஒதுக்காமல் இருப்பது நியாயமா? முழு நாள் ஒதுக்க வேண்டுமென்பதுதான் முறை. ஆகவே, பேரவைத் தலைவரவர்கள் இதற்கு ஆவன செய்ய வேண்டும் என்கிற ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அன்று கூட முதலில் கேள்வி நேரம் என்று இருந்தாலும்கூட அது ஒரு மணிக்கு முடிந்தால் யாரும் குறை சொல்லமுடியாது என்று குறிப்பிட்டிருக்கிறேன். இரண்டு அல்லது ஒரு நாள் ஒதுக்க வேண்டுமென்று ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் இன்று ஒரு மணிக்கு முன்னால் முடிந்துவிட்டது. யாரும் பெயர் கொடுக்கவில்லை. நேரம் கேட்டார்களே தவிர பெயர் கொடுக்கவில்லை. ஒரு மணி, ஒன்றரை மணி என்று நேரம் கேட்டார்களே தவிர, யாரும் பெயர் கொடுக்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரு மணி நேரம் பேசியிருந்தால் அந்த ஐம்பது தடவை எழுந்து நிற்கவேண்டிய அவசியம்கூட எனக்கு இருந்திருக்காது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் பேசும்போதுகூட இன்னும் நேரம் வேண்டுமென்று கேட்டார்கள். நீங்கள் மணி அடித்தீர்கள். நீங்கள் ரொம்ப ஸ்ட்ரிக்ட் ஆக இருக்கிறீர்கள் போலிருக்கிறது என்று இருந்துவிட்டோம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்கள் கூட இன்னும் பேசவேண்டுமென்று கேட்டார்கள். தலைவரவர்கள் நேரம் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். திரு. பாலசுந்தரம் கூட அவ்வாறு கேட்டார்கள். நீங்கள் மணி அடித்து உட்கார வைத்து விட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுக்கப்பட்ட பெயர்ப் பட்டியலை நான் சொல்கிறேன். பேசுவதற்கு 5, 6 உறுப்பினர்களுக்கு மேல் பெயர் கொடுக்கவில்லை. அதுதான் இருக்கிற நிலைமை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, நான் இங்கேயிருந்த போது திரு. சுரேந்திரன் கூட வந்து கேட்டார்கள். அப்போது நீங்கள் முதலிலேயே கொடுத்திருக்க வேண்டுமென்று சொன்னீர்கள். அப்போதே பெட்டராக பிளான் பண்ணியிருக்கலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: காலையில் கூட நான் இந்தப் பிரச்சினையை எழுப்பினேன். ஆனால் பேரவைத் தலைவர் இடம் கொடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை. ஒரு மணி வரை வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணியிருந்தோம். அதற்குள் முடிந்து விட்டது. அதனால் வேறு சப்ஜெக்டுக்கு போயிருக்கிறோம். அதில் ஒன்றும் தப்பு இல்லை.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, நான் ரொம்ப நேரமாக ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நம்முடைய தலைமைச்சர் அவர்கள் கொண்டுவந்த துணை மானியக் கோரிக்கை

மீது விவாதம் நடைபெற்று, எல்லாம் முடிந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் ஒரு மானியக் கோரிக்கையை முதல்வர் அவர்கள் கொண்டுவரவேண்டுமென்றுவிரும்புகிறார்களா?

9. 1975-1976-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

Thiru B. VENKATASWAMY : Sir, I want to offer a few remarks on this Agriculture Demand. About 80 per cent of our people are engaged in agriculture and the amount allotted, when considered to the total budget, is very small. More amoun tought to have been allotted for Agriculture. That is the reason why the poor farmer who is born in debt, lives in debt and dies in debt. That is what is happening to the whole Nation and in Tamil Nadu. That is why we could not improve the lives of agriculturists. The agriculturists are suffering a lot. That is why they cannot come up to the levels of others, those employed in industry or under Government.

I have given a cut motion to bring down the fertiliser rate. One bag of urea was costing Rs. 50 last year. Now its price is Rs. 105. The rate has doubled. The same is the case with other fertilisers. But has the agriculturists' produce increased correspondingly ? No. That is why the poor farmer is facing difficulties.

In Industry, they calculate the capital invested, rate of return on capital, and after allowing for depreciation, etc., and fixing 10 per cent return on capital, the price of the product manufactured is fixed. In all other cases also the same method is followed. But in agriculture, it is not at all so. The consumer fixes the price and not the agriculturist. He says ' I will give so much for one bag of paddy '. That is what the consumer says and the poor farmer has to give it at that rate. Compared to the 100 per cent increase in rates of fertilisers, is there increase in the produce of the agriculturist ? No. It is hardly 2 to 3 per cent increase. What I say is let the Government carefully examine the following factors i.e., the value of the land, cost of cultivation, price of fertilisers, etc., and then giving a reasonable margin to the cultivator, fix the price of this produce. If you calculate like that the farmer has to spend nearly Rs. 150 to Rs. 160 to raise one quintal of paddy. But what is it the Government is giving for the producer ? They give Rs. 70 to Rs. 80 per quintal of paddy. Is this enough ? With this, what can the poor farmer do ? That is why he lives in debt and dies in debt.